## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| M.C.O.P. No. 48/2020 | Date : 28.02.2024 | PW1 |
|---|---|---|
| Name: காயத்திரி | S / W/o. **தங்கராஜ்** | |
| Evidence Recorded Time: 11.20 A.M. to 11.35 A.M. | | |

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

விபத்தில் இறந்து போனவர் என் கணவர். விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்து பற்றி புகார் கொடுத்தது யார் என்றால் தேவராஜன் என்பவர் கொடுத்தார். அவர் என் அண்ணன். அவரும் நேரில் பார்க்கவில்லை அவருக்கு யாரோ தகவல் சொல்லி தான் அவர் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். என் கணவர் ஓட்டி சென்ற இருசக்கர வாகனத்தின் வண்டி எண் தெரியுமா என்றால் நீண்ட நாள் ஆகிவிட்டதால் ஞாபகமில்லை. அந்த வண்டி எண். டிஎன்.52 எஸ்.6091 என்றால் சாட்சி தற்போது சரி என்று சொல்கிறார். மேற்படி வாகனம் யுவராஜ் என்பவருக்கு சொந்தமானது என்றால் சரிதான். மோட்டார் வாகன ஆய்வறிக்கை எ.ம.சா.ஆ.1 ஆகும். விபத்தில் சம்மந்தப்பட்ட மற்றொரு வாகனமாக டிஎன் 52 கே 8913 உள்ள மோட்டார் வாகன ஆய்வறிக்கை என்னிடம் காட்டப்படுவது தான் என்றால் சரிதான். அது எ.ம.சா.ஆ.2 ஆகும். இரண்டு இருசக்கர வாகனமும் நேருக்கு நேர் மோதி விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். என் கணவருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் உள்ளது. அதை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தலையில் அடிபட்டு தான் அவர் இறந்தார் என்றால் சரிதான். விபத்து சமயத்தில் ஹெல்மெட் போடவில்லை என்றால் சரியல்ல. ஹெல்மெட் போட்டிருந்தார். என் பிறந்த தேதி 09.08.1966 என்றால் சரிதான். என்னுடைய ஆதார் அட்டையின் நகல் என்னிடம் காட்டப்படுவது தான். அது எ.ம.சா.ஆ.3 ஆகும். என் மகன் யுவராஜ் 19.07.1991ல் பிறந்தார். அதற்கான ஆதார் என்னிடம் காட்டப்படுவதுதான். அது எ.ம.சா.ஆ.4 ஆகும். அதேபோல் என் மகள் வைஷ்ணவி 14.12.1997ல் பிறந்தார். அதற்கான ஆதார் அட்டை என்னிடம் காட்டப்படுவது தான். அது எ.ம.சா.ஆ.5 ஆகும். என் கணவர் 04.01.1961ல் பிறந்தார். அதற்கான ஆதார் அட்டை என்னிடம் காட்டப்படுவது தான். அது எ.ம.சா.ஆ.6 ஆகும்.

**(வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)**

ஒம்/-PW1

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/−எஸ்.முத்துராமன்
சார்பு நீதிபதி, மேட்டூர்.